BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# புதுமை படைத்தல் மாவட்டத்துடன் கூட்டு சேர்ந்ததில் ப்ராம்ப்ட்டன் நகரம் *பொருளாதார வளர்ச்சியில் உன்னதம்* எனும் விருது பெற்றதில் பெருமை அடைந்தது

ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 26, 2020) – சமீபத்திய சர்வதேச பொருளாதார வளர்ச்சிக் கவுன்சிலின் 2020 ஆம் ஆண்டிற்கான, பொருளாதார வளர்ச்சியில் உன்னதம் எனும் விருதுகள் வகையில், ப்ராம்ப்ட்டன் நகரமானது தனது புதுமை படைத்தல் மாவட்டம் மற்றும் இரண்டாம்நிலைக்குப் பிந்தைய கூட்டுமுயற்சிகளுக்காக, தாமிர  தரவரிசை விருது வழங்கப்பெற்றது.

இந்த விருதுகள்  மூலமாக, உலகின் மிகச்சிறந்த பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் கூட்டாண்மைகள், சந்தைப்படுத்தல் பொருட்கள் ஆகியவையும் மற்றும் அந்தந்த ஆண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க தலைவர்களும் அங்கீகரிக்கப்படுகின்றனர். நகரத்திற்குள்ளாக, புறநகரில் மற்றும் கிராமப்புற சமூகங்களில், நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளுக்காக, நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை, 35 விருது பிரிவுகள் கவுரவிக்கின்றன. உலகெங்கிலும் உள்ள பல்வேறு வகையான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி உண்டாக்குபவர்கள் அடங்கிய குழு,  இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற ஒரு *நியமனம் செய்தல்* செயல்முறையைப் பின்பற்றி,   விருதுகளை தீர்மானித்தனர்.

“கல்வி நிறுவனங்களுடனான கூட்டாண்மை” எனும் வகையில், ப்ராம்ப்ட்டன் நகருக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

புதுமை படைக்கும் மாவட்டமாக முத்திரையிடப்பட்ட  ப்ராம்ப்ட்டன் நகரமானது, தன்னுடைய புதுநகரமைப்பு பகுதியில் புதுமை படைத்தல் மற்றும் தொழில் முனைவோருக்கான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கி அதற்கு புதுமை [புதுமை படைக்கும் மாவட்டம்] என பெயர் சூட்டியது. இந்த புதுமை படைக்கும் மாவட்டமானது, கல்வி மற்றும் திறன் மேம்பாடு, மற்றும் தொழில் அமைப்புக்கான தொடக்கநிலை காத்திருப்பு பணிகள், மற்றும் தொழிலைத் தொடங்குவதற்கான உத்வேகம் அளித்தல், ஆகியவற்றை வழங்குவதற்காக, ரையர்சன் பல்கலைக்கழகம் மற்றும் அல்கோமா பல்கலைக்கழகம் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களுடனான கூட்டாண்மைகளைப் பயன்படுத்திக் கொள்கிறது. இந்தக் கல்வி நிறுவனங்களுடனும் மற்றவர்களுடனும் கூட்டு  சேர்வதே, ப்ராம்ப்ட்டன் நகரின் புதுமை  படைக்கும் சுற்றுச்சூழல் அமைப்பிற்கான அடித்தளமாகும்.

ரையர்சன் பல்கலைக்கழகத்துடனான கூட்டாண்மையானது, இணையதள குற்றங்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதில் சிறந்து விளங்கும் மையமாக ப்ராம்ப்ட்டன் நகரை நிலைநாட்டுகிறது. ரையர்சனின் ரோஜர்ஸ் சைபர் செக்யூர் கேட்டலிஸ்ட் எனும் இணையதள குற்றங்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதில் புதுமை படைத்தல் மற்றும் ஒத்துழைப்பு நல்குதலுக்கான ஒரு தேசிய மையமாகும்; இதில் ஃபெடெவ் (FedDev) மற்றும் தனியார் துறை கூட்டமைப்புக்களுடன் நிதி பங்களிப்பாளராக

நகரமும் இணைகிறது. கேட்டலிஸ்ட் சைபர் ஆக்ஸிலரேட்டர் (Catalyst Cyber Accelerator) மற்றும் ரைர்சன் வென்ச்சர் ஸோன் (Ryerson Venture Zone)-ஐ நிறுவுவதற்கும் கூட நகர நிர்வாகம் கூட்டு சேர்ந்தது; இதில் தொடக்கநிலை பணிகள், நிதியளிப்பு, நெட்வொர்க்கிங் மற்றும் சிறப்பான வழிகாட்டுதலுக்கான உதவி ஆகியவை கிடைக்கும்.

அல்கோமா பல்கலைக்கழகத்துடன் நகரம் கூட்டு சேர்ந்ததன் காரணமாக, நகரத்தில் உள்ள ப்ராம்ப்ட்டன் நகர பகுதியின் விரிவாக்கத்திற்கு ஆதரவு கிடைக்கிறது; இதனால் செலவு குறைவான கல்விக்கான அணுகல் அதிகரிக்கிறது. பல்கலைக்கழகத்தின் கல்வியானது, பலருக்கும் கிடைக்கும்படி விரிவாக்குதல் மற்றும் மாணவர் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவை, புத்துயிர் பெற்ற நகரத்தின் புதிய பகுதிக்கு பங்களிப்பு செய்கிறது; இதன் மூலம் இளைஞர்களை ப்ராம்ப்ட்டன் நகரில் இருந்தபடியே படிக்கவும், வாழவும், வேலை செய்யவும் வழி வகுக்கிறது.

புதுமை படைக்கும் மாவட்டத்தின் விரிவாக்கமே ப்ராம்ப்ட்டன் நகரின் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய அங்கமாகும். புதுமை படைக்கும் மாவட்டத்தில் கல்வி நிறுவனங்களுடனான கூட்டு, மற்றும் உள்ள பிற அமைப்புகளுடனான கூட்டாண்மை, ஆகியவை இந்த மாவட்டத்திற்கு ஒரு உறுதியான அடித்தளத்தை அமைத்து, புதிய கூட்டாளிகளை மாவட்டத்திற்குள் ஈர்க்க உதவுகிறது. புதுமை படைக்கும் மாவட்டத்திற்கான குறிக்கோளானது, தொழில்முனைவோர் மற்றும் வணிகர்கள் தங்கள் தொழில் வளர்ச்சிப்பாதையின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவைப்படும் பல ஆதரவுகளையும் வழங்குவதே ஆகும்.

சர்வதேச பொருளாதார மேம்பாட்டு கவுன்சில் என்பது பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்துபவர்களுக்கு சேவை செய்கின்ற, லாப நோக்கமில்லாத, பாகுபாடு காட்டாத, உறுப்பினர்கள் கொண்ட அமைப்பு ஆகும். 5,000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்த IEDC என்பது பொருளாதார வளர்ச்சி தொழில் வகையில் சேவையாற்றி வருகின்ற உலகின் மிக அதிக உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“குறிப்பாக, நாங்கள் மீட்சியை நாடிச் செல்கையில், இவை எல்லாவற்றையும் தனியாக இருந்தபடிசெய்ய முடியாது என்பது எங்களுக்குத் தெரியும் - நமது நகரத்தின் நல்வாழ்வுக்கு மிக முக்கியமான விஷயமாக இருப்பது, எல்லா பகுதிகளிலும் வலுவான கூட்டாண்மையே ஆகும். எங்களுடன் சேர்ந்து வந்து நமது நகரத்தை ஒரு செழிப்பான மற்றும் வளமான எதிர்காலத்திற்குள் சாதகமான வகையில் நகர்த்திச்செல்ல எங்களுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றிய எங்கள் கூட்டாளிகளுக்கு நன்றி. ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“எங்கள் புதுமை படைக்கும் மாவட்டத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியே நமது பொருளாதார மீட்புக்கான மூலோபாயத்தில் ஒரு முக்கிய செயல்பாடாகும்; அத்துடன் நமது வெற்றியில் நமது கூட்டாண்மை ஒரு ஒருங்கிணைந்த பங்கைக் கொண்டுள்ளது. COVID-19 தொற்றுப்பரவல் காலத்தின் ஊடாக நமது

நகரத்தை முன்னோக்கி நகர்த்திச்சென்று ஒருவழியாக அந்தத் தொற்று பரவலிலிருந்து மீண்டு வெளியேறும்போது, நமது தொழில்முனைவோருக்கும் வணிக சமூகத்தினருக்கும், அவர்களின் முழு மீட்சி மற்றும் எதிர்கால வளர்ச்சியை செயல்படுத்த உதவும் வகையில், ஒரு ஆதரவை வழங்க நமது கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம். ”

– *பால் வின்செண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத்தலைமைப் பொறுப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் கலாச்சாரம்; துணைத்தலைமைப் பொறுப்பு, மேயரின் கோவிட்-19 தொற்று பரவலுக்கு எதிரான பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நமது சமூகத்திற்குள்ளாக கூட்டாண்மைகளை உருவாக்குவதற்காக நமது ஊழியர்கள் ஒவ்வொரு நாளும் செய்யும் பணிகளைப் பாராட்ட நான் விரும்புகிறேன். நாங்கள் எப்போதும் சிறந்து விளங்கவே முயற்சிக்கிறோம், மற்றும் இந்த விருதானது, நமது நகரத்தை மேம்படுத்துவதற்கும் குடியிருப்பாளர்கள் பயனடைவதற்கும் கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கும் தேவைப்படுகின்ற, பொருளாதார வளர்ச்சிக்காக திரைக்குப் பின்னால் இருந்தபடி நமது ஊழியர்கள் ஒவ்வொரு நாளும் செய்த பணிகளுக்கு ஒரு சான்றாகும். ”

– *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“IEDC வழங்குகின்ற பொருளாதார வளர்ச்சியில் உன்னதம் எனும் விருது பெற்ற வெற்றியாளர்கள், பொருளாதார வளர்ச்சியின் மிகச் சிறந்த நிலைக்கு பிரதிநிதித்துவம் செய்கின்றனர், மேலும் ஒவ்வொரு நாளும் பாடுபடும்தன்மை, புத்தி கூர்மை, நேர்மை மற்றும் தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள், திட்டப்பணிகள் மற்றும் கூட்டாண்மைகள் ஆகியவை பிராந்திய வாழ்க்கைத் தரத்தை அளவிடக்கூடிய வகையில், மேம்படுத்திய 100 க்கும் மேற்பட்ட சமூகங்களை அங்கீகரிப்பதில் எங்களுக்கு கவுரவம் கிடைத்ததாக பெருமைப்படுகிறோம். ”

– கென்னி மெக்டொனால்டு*, 2020 IEDC* போர்டின் தலைவர்*;* தலைமை நிர்வாக அதிகாரி, ஒன் கொலம்பஸ் நிறுவன அமைப்பு

“ப்ராம்ப்ட்டன் நகரத்திற்கான இந்த தனித்துவமான தகுதியை அடையச் செய்வதில் தானும் ஒரு பங்காற்றியிருப்பதில் ரையர்சன் பல்கலைக்கழகம் மகிழ்ச்சி அடைகிறது. ரையர்சன் பல்கலைக்கழகம் வழங்குகின்ற ரோஜர்ஸ் சைபர் செக்யூர் கேட்டலிஸ்ட் ( Rogers Cybersecure Catalyst ) மற்றும் ப்ராம்ப்ட்டனில் உள்ள ரையர்சன் வென்ச்சர் ஸோன் (Ryerson Venture Zone) மூலமாக, புதுமை படைத்தலை உந்திச்செல்லவும், ப்ராம்ப்ட்டன் நகர தொழில் முனைவோர் வளர்ச்சி பெறவும், இந்த பல்கலைக்கழகம் நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் வழங்குகிறது. எதிர்காலத்தில் இந்த கூட்டாண்மைகளை தொடர்ந்து வளர்த்து வருவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம். "

– *மொஹம்மெட் லச்செமி, தலைவர் மற்றும் துணைவேந்தர், ரையர்ஸன் பலகலைக்கழகம்*

“ப்ராம்ப்ட்டன் நகரத்திற்கு IEDC வழங்கிய அங்கீகாரத்தை அறிந்து அல்கோமா பல்கலைக்கழகம் மகிழ்ச்சியடைந்தது. நகர அதிகாரிகளால் வெளிக்காட்டப்பட்ட தலைசிறந்த தலைமைத்துவம், தொலைநோக்குப் பார்வை மற்றும் கூட்டாண்மைக்கான அர்ப்பணிப்பு ஆகியவை எல்லாம் சேர்ந்து,

ப்ராம்ப்ட்டன் நகரத்தின் புதியபகுதியில், இரண்டாம் நிலைக்கல்விக்கு அடுத்த நிலைக் கல்விக்கான அணுகலை நாங்கள் தொடர்ந்து விரிவுபடுத்தும்போது, 2019-20 ஆம் ஆண்டில் அல்கோமா பலகலைக்கழகத்தில் 223 சதவீத மாணவர் சேர்க்கைக்கான வளர்ச்சிக்கு உதவியது. வளர்ந்து வரும் இந்த சமுதாயத்திற்கு, குறுகிய மற்றும் நீண்டகால பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை இந்த முயற்சிகள் வழங்கும். "

– க்ரெய்க் ஃபவ்லர், துணைத்தலைவர், வளர்ச்சி, புதுமை படைத்தல் மற்றும் வெளியுறவுத்துறை, அல்கோமா பலகலைக்கழகம்

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca *இல்* இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca